மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டு தீர்ப்பாயம் , ஸ்ரீவைகுண்டம்

**முன்னிலை : திருமதி.A.பர்சாத் பேகம் பிஏ.எம்.எல்.,**

**மோட்டார் வாகன இழப்பீட்டு தீர்ப்பாயர்,**

2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 10 -ம் நாள்,புதன்கிழமை.

**மோட்டார் வாகன விபத்து கோரிருரிமை மனு எண்.12/2025**

**CNR.No.TNTT19-000137-2025**

லெட்சுமி --- மனுதாரர்

/எதிர்/

1. P.மாரிமுத்து
2. Universal Sompo General Insurance Co.Ltd,
   Branch Office, Teynampet, Chennai - 8
   Through its Branch Manager --- எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது திருச்செந்தூர் சார்பு நீதிமன்றத்தில் MCOP.No.2/2023 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு பின்னர் அதிகார வரம்பு காரணமாக மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் ஆணை எண். 166/2025, நாள் 09.04.2025 ன் படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு MCOP.N,12/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தின் முன்பாக 10.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.உச்சிமாகாளி அவர்கள் முன்னிலையாகியும், 1வது எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் 1வது எதிர்மனுதாரரை தோன்றா தரப்பினராக கருதி 1வது எதிர்மனுதாரர் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள

நிலையிலும் 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.ஆண்ட்ருமணி அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதவுரை கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் கூட்டாகவோ, தன்னிச்சையாகவோ ரூ.10,00,000/- ஐ நஷ்ட ஈடாக விபத்து நடந்த தேதி முதல் தொகை செலுத்தும் தேதி வரை மேற்படி தொகைக்கு 12% வட்டியுடன் சேர்த்து செலுத்துமாறும் இந்த மனுவின் செலவுத் தொகை மனுதாரருக்கு எதிர்மனுதாரர்களிடமிருந்து கிடைக்கும்படிக்கும், மற்றும் இதர பரிகாரங்கள் வழங்கிட வேண்டி மோட்டார் வாகன சட்டம் பிரிவு 32/19 மற்றும் Form II, See Rule 4(1) and (2) of the Tamil Nadu Motor Vehicle Accidents, claims Tribunal Rules, 1989 and made under in G.O Ms.1170 Home (Trnasport- VII) Dated 1.7.1989, -ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.மனுவின் சுருக்கம் :-**

கடந்த 16.08.2022 ம் தேதி 15.45 மணிக்கு இந்த மனுதாரர் TN 92 E 6221 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் கோபால் என்பவர் வண்டியை ஓட்ட பின் இருக்கையில் அமர்ந்து மீனாட்சிபட்டியிலிருந்து சீத்தர்குளம் நோக்கி சென்று கொண்டிருந்தார். அணியாபரநல்லூர் புதுப்பட்டி ரோடு அருகே சுடலை சாமி கோவில்

அருகே இடது புற ஓரமாக சென்று கொண்டிருந்தபோது எதிரி 1வது எதிர்மனுதாரருககு சொந்தமான 2வது எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்ட TN 92 D 2334 என்ற பதிவு எண் கொண்ட லாரியை அதன் ஓட்டுனர் 1வது எதிர்மனுதாரர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து சாலை விதிகளை கடை பிடிக்காமல் மனுதாரர் பயணம் செய்த இரு சக்கர வாகனத்தில் மோதி அதன் விளைவாக மனுதாரரும், இரு சக்கர வாகனத்தை ஓட்டியவரும் கீழே விழுந்து இருவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டு காயம் அடைந்து இருவரும் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த மனுதாரர் 16.8.2022 முதல் 18.8.2022 வரை உள் நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார். அதன் பிறகு வெளி நோயாளியாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வருகிறார். அதன் விளைவாக அவருக்கு ரூ.50,000/- வரை மருத்துவ செலவு ஏற்பட்டுள்ளது. இந்த விபத்துக்கு மனுதாரர் எந்த வகையிலும் பொறுப்பானவர் அல்ல. 1வது மனுதாரர்/ஓட்டுநரின் அதிவேகமும், அஜாக்கிரதையும், சாலை விதிகளை அனுசரிக்காமல் லாரியை ஓட்டி வந்தது தான் விபத்துக்கு காரணம் ஆகும். எனவே 1வது எதிர்மனுதாரர் மீது ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தில் குற்ற எண்.226/22 சட்டப்பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மனுதாரருக்கு 43 வயது ஆகிறது. அவர் ஆரோக்கியமான உடல் வாகு உடையவர். விவசாய கூலி வேலை பார்த்து மாதம் ரூ.18,000/- சம்பாதித்து வருகிறார். இந்த விபத்து காரணமாக அவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது. மூளை பகுதியில் மற்றும் இடது

முன் புற பகுதியிலும் ரத்த கட்டு வீக்கமும் உள்ளது. மேற்படி கொடுங்காயங்கள் காரணமாக மனுதாரருக்கு இடது பக்க நெஞ்சில் அடிக்கடி வலி ஏற்படுகிறது. தலை காயம் காரணமாக தலையில் வலியும் தலை சுற்றும் ஏற்பட்டுள்ளது. மேற்படி காயங்கள் காரணமாக மனுதாரர் விவசாய கூலி வேலைக்கு செல்ல முடியாமல் அன்றாட வேலை செய்ய முடியவில்லை. நிரந்தரமாக ஊணமாகி விட்டது. மனுதாரருடைய எதிர்கால வாழ்க்கை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு உடல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நல்ல முறையில் சிகிச்சை பெறப்பட்ட போதிலும் முழுமையாக குணமாகவில்லை. எதிர்மனுதாரருடைய அதி வேகமும் அஜாக்கிரதையும், கவனக்குறைவு காரணமாகத்தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்து காரணமாக மனுதாரருக்கு ஏற்பட்ட செலவீனங்களுக்கு மனுதாரர் ரூ.13,00,000/- இழப்பீடு பெறக்கூடியவர் இருப்பிலும் ரூ.10,00,000/- இழப்பீடு கிடைத்தால் போதுமானது என மனுதாரர் இழப்பீடு கேட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3**. இந்த மனுவின் 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு இந்த விபத்துக்கு காரணம். எனவே 1, 2 எதிர்மனுதாரர்கள் கூட்டாகவோ தனித்தனியாகவோஇழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

**4) 2 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரை சுருக்கம்:-**

இந்த மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையல்ல. மனுதாரர் கேட்டுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதல்ல. மனு சங்கதிகளை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் மனுதாரருக்கு சாதாரண காயங்கள் மட்டுமே ஏற்பட்டுள்ளன. மனுதாரருக்கு ஏற்பட்டதாக சொல்லும் மருத்துவ செலவீனங்களுக்கு, ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. அரசு மருத்துவமனையில் இலவசமாக சிகிச்சை எடுத்துள்ளார். எனவே மனுதாரருக்கு மருத்துவ செலவீனங்கள் இழப்பீடாக கிடைக்கத்தக்கதல்ல. மேலும் ஊட்ட சத்து வகைக்காகவும் போக்குவரத்திற்காகவும் காயத்திற்காகவும் முறையே 10 ஆயிரம், 30 ஆயிரம், 50 ஆயிரம் என மனுதாரர் கேட்டுள்ள இழப்பீடு அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. மனுதாரருக்கு நிரந்தர ஊணமோ பகுதி நிரந்தர ஊணமோ ஏற்படவில்லை. அதன் பொருட்டு அவர் கேட்டுள்ள 2 லட்சம் இழப்பீடு அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. அதிர்ச்சி மற்றும் மன உளைச்சலுக்காக மனுதாரர் கேட்டுள்ள 1 லட்சம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. வலி வேதணைக்காக 2 லட்சமும் அசௌகரியத்திற்காக 1 லட்சமும் என மனுதாரர் கேட்டுள்ள இழப்பீடு அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்றவருடைய கவனக்குரைவும் அஜாக்கிரதையும், அதிவேகமும் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. லாரி ஓட்டுனர் விபத்து வாகனமான லாரியை மெதுவாகவும் சாலை விதிகளை கடைபிடித்தும் ஓட்டிச்சென்றார். இரு சக்கர வாகனத்தை ஓட்டியவருக்கு விபத்து சமயத்தில் தகுதியான ஓட்டுனர் உரிமம் இல்லை. அவருடைய கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. 2 வது எதிர்மனுதாரர் நிறுவனம் நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. விபத்து வாகனமான TN 92 D 2334 என்ற லாரி விபத்து சமயத்தில் 1 வது எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது. 2 வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்து 2 வது எதிர்மனுதாரர் நிறுவனம்

வழங்கிய காப்பீடு நடைமுறையில் உள்ளதாக மனுதாரர் நிரூபிக்க வேண்டும். விபத்து நடந்த விதம் குறித்து மனுதாரரே நிரூபிக்க வேண்டும். லாரி ஓட்டுநருக்கு தகுதியான ஓட்டுநர் உரிமம் உள்ளது. விபத்து சமயத்தில் லாரியின் பதிவு சான்று, தகுதி சான்று அனுமதி என அனைத்தும் சரியாக இருந்தன. மனுதாரர் கோரியுள்ள வட்டி விகிதம் அதிகப்படியானது. மனுதாரரின் மனு நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனு தள்ளுபடி செய்யவேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5**. மனுதாரர் தரப்பில் மனுதாரர் திருமதி.லெட்சுமி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர்மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் இல்லை.

**6. <u>தீர்மாணிக்கப்படவேண்டிய பிரச்சனைகள்</u>** :-

| | |
|---|---|
| 1 | இம்மனுவில் 1வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 92 D 2394 என்ற பதிவு எண் கொண்ட லாரியை அதன் ஓட்டுநர் அதி வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் பயணம் செய்த TN 92 E 6221 என்ற இரு சக்கர வாகனத்தில் மோதி பின் இருக்கையில் அமர்ந்து சென்ற மனுதாரருக்கு காயம் ஏற்படுத்தியுள்ளாரா? |
| 2 | இந்த மனுதாரர் கேட்டுள்ளவாறு இழப்பீட்டு தொகை பெற உரிமையுடையவரா? ஆம் எனில் அவருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டு தொகை எவ்வளவு. யாரிடமிருந்து இழப்பீடு பெறவேண்டும்? |

**7**. இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் வழக்கு ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

8. மனு சங்கதிகளை நிரூபிக்கும் பொருட்டு இந்த மனுதாரர் லெட்சுமி ம.சா.1 ஆக வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார். அவருடைய முதல் விசாரணை சா்சியத்தில் " கடந்த 16.08.2022 அன்று 15.45 மணியளவில் நான் எண்.TN 92 E 6221 என்ற மோட்டார் சைக்கிளில் கோபால் என்பவர் தலைகவசம் அணிந்து ஓட்ட, பின்னால் அமர்ந்துகொண்டு மீனாட்சிபட்டியிலிருந்து சீதர்குளம் செல்வதற்காக , அணியாபரநல்லூர் புதுப்பட்டி ரோடு சுடலைசாமி கோவில் அருகே, இடதுபுற ஓரமாக சாலைவிதிகளை கடைப்பிடித்து சென்று கொண்டிருந்தபோது, எதிரே வந்த 2 வது எதிர்மனுதாரர் காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்யப்பட்ட 1 வது எதிர்மனுதாரருக்கு சொந்தமான பதிவு எண். TN 92 D 2334 என்ற லாரியை அதன் ஓட்,டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும்ஹாரன் அடிக்காமலும், கவனக்குறைவாகவும், சாலைவிதிகளை கடைபிடிக்காமல் ஓட்டி வந்து நான் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது மோதிவிட்டார். அதனால் நானும், ஷை கோபால் என்பவரும் தூக்கி வீசப்பட்டோம் அதனால் எனக்கு உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டது. உடனே என்னை திருநெல்வேலியில் உள்ள TVMC மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, மருத்துவமனையில் 11.08.2022 முதல் 18.08.2022 வரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்றேன். பின்பு பல்வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறேன். அதனால் எனக்கு மருத்துவ செலவுக்காக ரூ.50,000/- வரை செலவாகியுள்ளது. மேற்படி விபத்தில் எனக்கு தலை மற்றும் மார்பில் ஏற்பட்டுள்ள காயங்களினால் எனக்கு அடிக்கடி தலைவலி ஏற்படுகிறது. என்னால் மூச்சு விடுவதில் சிரமம்

உள்ளது. எனது உடலின் அசைவுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் எனக்கு மிகுந்த மனவேதனையும், வருமான இழப்பும் ஏற்பட்டுள்ளது. நான் நிரந்தரமாக ஊனமாக்கப்பட்டேன். என்னுடைய எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது."என சாட்சியம் சொல்லியுள்ளார்.

9. அவரை எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது இரு சக்கர வாகனத்தை விபத்து சமயத்தில் என் அக்கா மகன் கோபால் என்பவர் தான் ஓட்டிச்சென்றார். என்றால் சரிதான். கோபால் அப்போது கல்லுரியில் படித்து வந்தார் என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு கோபாலுக்கு ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா? அவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்திருந்தால் எனது தரப்பு சான்றாவணமாக தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. வீட்டில் இருக்கிறது. விபத்தின் போது ஓட்டுநர் உரிமம் கோபாலுக்கு கிடையாது என்றும் அவர் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் இரு சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. நாங்கள் மெதுவாகத்தான் ஓட்டிச் சென்றோம். நாங்கள் பயணித்த இரு சக்கர வாகனத்தின் அதன் உரிமையாளரை எதிர்மனுதாரராக கட்சி சேர்க்க வேண்டும் என்றால் சரிதான். கோபால் என்பவருடைய கவனக்குறைவு காரணமாக விபத்து ஏற்பட்டது என்றால் நாங்கள் இடது பக்கம் நேராக சென்று கொண்டிருந்தோம். எதிர் பக்கம் சாலையின் ஓரமாக வர வேண்டிய வாகனம் திடீரென குறுக்காக வந்து என் மீது மோதியது" என சாட்சியம் சொல்லியுள்ளார்.

10) எதிர்மனுதாரர் தரப்பில், விபத்து வாகனமான லாரியை ஓட்டிச்சென்ற 1வது

எதிர்மனுதாரர் சாலையின் குறுக்கே வந்து மனுதாரருடன் பயணம் செய்த இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக மனுதாரர் சொல்லியுள்ள சாட்சியத்தை மறுத்துரைக்கவில்லை. விபத்து வாகனமான லாரி ஓட்டுநர் விபத்து நடந்த விதம் குறித்து சாட்சி சொல்லி விளக்கம் கொடுக்கவில்லை.

11. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையில் சொல்லியுள்ளபடி இந்த விபத்துக்கு 1வது எதிர்மனுதாரர் லாரி ஓட்டுநர் அதி வேகமாகவும், அஜாக்கிரதையும், கவனக்குறைவும் தான் காரணம் என சொல்லியுள்ளார். அதனை உறுதிப்படுத்தும் விதமாக 1வது எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீது ஸ்ரீவைகுண்டம் காவல் நிலையத்தில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 1வது எதிர்மனுதாரர் தரப்பில் குற்ற வழக்கு பற்றி ஆட்சேபனை எதுவும் இல்லை. குற்ற வழக்கின் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் மேற்படி 1வது எதிர்மனுதாரர் விபத்து வாகனத்தை ஓட்டி சென்றவர் என்றும் விபத்துக்கு 1வது எதிர்மனுதாரர் ஓட்டுநர் லாரியை அதி வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தினார் எனவும் அவருடைய கவனக்குறைவும், அஜாக்கிரதையும் விபத்துக்கு காரணம் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. அவ்வண்ணமே பிரச்சனை 1க்கு விடை காணப்படுகிறது.

<u>12. பிரச்சனை 2</u>

காயம் பட்ட மனுதாரர் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதாக சாட்சியம் சொல்லியுள்ளார். அரசு மருத்துவ கல்லூரியில் வழங்கிய விபத்து பதிவேடு ம.சா.ஆ-4 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த

விபத்தில் மனுதாரருக்கு தலை மற்றும் மார்பில் ஏற்பட்டுள்ள காயங்களினால் அடிக்கடி வலிஏற்படுகிறது என்றும் மூச்சு விடுவதில் மிகுந்த சிரமம் உள்ளதாகவும் உடலின் அசைவுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் மிகுந்த மனவேதனையும் வருமான இழப்பும் ஏற்பட்டுள்ளது. நிரந்தரமாக ஊனமாக்கப்பட்டுள்ளேன் என சாட்சியம் சொல்லி அவர் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ-4 விபத்து சான்றில் அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை குறித்து விவரிக்கவில்லை. ம.சா.1 ஐ எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது ”விபத்தில் என்ன காயங்கள் ஏற்பட்டது என ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு சாதாரண காயம் ஏற்பட்டது அதன் காரணமாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கான சிகிச்சைக்கு பின்னர் நான் பூரண குணம் அடைந்து விட்டேன் என்றால் தற்போது சரியாக நடக்க முடியவில்லை” என சாட்சியம் சொல்லி உள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து மருத்துவ செலவீனங்கள் குறித்து தனிப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. அவருக்கு எழும்பு முறிவு காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்பதை ம.சா.ஆ.4 வாயிலாக அறிய முடிகிறது. அவர் 14.8.2022 முதல் 18.08.2022 ம் தேதி வரை உள் நோயாளியாக சிகிச்சை எடுத்துளளார். ஆனால் அவருக்கு தலை பகுதியில் 1X0.5X.05 செ.மீ அளவில் தலையில் 2 பகுதியில் சிதைந்த காயங்கள் காணப்பட்டுள்ளது. அந்த காயத்தின் வலி உணர்வு ஏற்பட்டதாகவும் வலது காலில் ஏற்பட்ட காயம் காரணமாக காலை அசைக்க முடியவில்லை எனவும் ம.சா.ஆ.4 ல் பதிவாகியுள்ளது. அதே சமயம் அவருக்கு

அறுவை சிகிச்சை எதுவும் செய்யப்பட்டதாக பதிவு இல்லை. தலை பகுதியில் C.T.Scan க்கு எந்த விதமான குறிப்பிடத்தக்க பாதிப்பும் இல்லை என்று அறியமுடிகிறது. ஆகையினால் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. அவருக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்டுள்ள நிலையில் மருத்துவ செலவீனங்கள் எதுவும் இல்லை என்பதையும் அறியமுடிகிறது. ஆகவே இந்த விபத்தில் அவருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.30,000/- இழப்பீடு கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

13. மனுதாரருக்கு கிடைக்கத்தக்க இழப்பீட்டு விவரங்கள் கீழ் கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

| வ.எண். | இழப்பீட்டு விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | வலி மற்றும் வேதனைக்காக | ரூ.30,000/- |

மேற்படி இழப்பீட்டுத்தொகையை யார் வழங்க வேண்டும் என்பது குறித்து பரிசீலிக்கும் போது விபத்து சமயத்தில் விபத்து வாகனமான TN 92 E D 2334 என்ற லாரியை அதன் ஓட்டுநர் அதி வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியதாக பிரச்சனை 1ல் விடை காணப்பட்டுள்ளதால் விபத்துக்கு இழப்பீடு தொகை தீர்மானிக்கப்பட்டுள்ள தொகையை 1வது எதிர்மனுதாரர் லாரியின் உரிமையாளர் வழங்க வேண்டும் என்றும் விபத்து சமயத்தில் மேற்படி லாரி 2வது எதிர்மனுதாரர் நிறுவணத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு நடைமுறையில் இருந்ததாக 2வது எதிர்மனுதாரர் காப்பீடு

நிறுவணம் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் வாகனத்தின் உரிமையாளருக்காக காப்பீடு நிறுவணமான 2 வது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார். எனவே மனுதாரருக்கு கிடைக்க தக்க இழப்பீடு தொகையை 1 வது எதிர்மனுதாரருக்காக 2 வது எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகையை இந்த மனு தாக்கல் செய்த தேதியான 06.01.2023 லிருந்து தொகை வசூல் செய்யும் தேதி வரை ஆண்டுக்கு 7 சதவீதம் வட்டி சேர்த்து பின் வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

<u>முடிவாக</u>

1. மனு பகுதியாக அனுமதித்து உத்தரவிடுகிறது.

2. மனுதாரருக்கு இழப்பீட்டுத்தொகையாக ரூ.30,000/- கிடைக்கக்கூடியது என உத்தரவிடப்படுகிறது.

3. இழப்பீட்டு தொகை மனு தாக்கல் செய்த 06.01.2023 முதல் தொகை செலுத்தும் நாள் வரை வைப்பீடு செய்யும் தேதி வரை ஆண்டு ஒன்றுக்கு 7 % வட்டி கணக்கிட்டு இன்றிலிருந்து 2 மாதங்களுக்குள் மனுதாரருக்கு அவருடைய வங்கிக்கணக்கு உள்ள கீழ்கண்ட வங்கியில் நேரடியாக செலுத்த உத்தரவிடப்படுகிறது.

## DETAILS OF BANK ACCOUNT MENTIONED BELOW

| | |
|---|---|
| Name of the BanK | Indian Overseas Bank |
| Account No. | 335001000004405 |
| IFSC CODE NO. | IOBA0003350 |
| E-MAIL ID | IOB33500iob.in |

| | |
|---|---|
| MICR Code | 627020100 |
| Phone No. | |

4. இழப்பீட்டுத்தொகையை 2 வது எதிர்மனுதாரர் 1வது எதிர்மனுதாரருக்காக மனுதாரருக்கு செலுத்த வேண்டும்.

5. மனுதாரர் உரிய நீதிமன்ற முத்திரை கட்டண பாக்கிதொகையை நீதிமன்றத்தில் செலுத்தி அதனுடன் மனுதாரரின் நிரந்தர கணக்கு எண்ணுக்கான அடையாள அட்டை (PAN CARD) இணைத்து குறிப்பாணை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

6. இழப்பீட்டுத்தொகைக்கான நீதிமன்ற கட்டணம் ரூ. 60/- ஐ ஒரு மாத காலத்திற்குள்ளாக செலுத்தவேண்டும்.

7. வழக்கறிஞர் கட்டணம் :ரூ.1500/-என நிர்ணயம் செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 10 ஆம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

BARSAD BEGUM A
Digitally signed by BARSAD BEGUM A
Date: 2026.06.10 16:20:57 +0530

மோ.வா.வி.கோ.தீர்ப்பாயர்/சார்பு நீதிபதி

திருவைகுண்டம்

**<u>மனுதாரர் தரப்பு தரப்பு சாட்சி -</u>**

ம.சா.1-திருமதி.லெட்சுமி

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் -</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 17.08.2022 | ஸ்ரீவைகுண்டம் காவல் நிலைய குற்ற எண்.226/2022 முதல் தகவல் அறிக்கை நகல் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது. |
| ம.சா.ஆ-2 | | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டு சரிபார்க்கப்பட்டது) |
| ம.சா.ஆ-3 | | வங்கி கணக்கு புத்தகம் முதல் பக்கம் புகைப்பட நகல் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்த்து குறியீடு செய்யப்பட்டது) |
| ம.சா.ஆ.4 | | மருத்துவ சிகிச்சைக்கான அரசு மருத்துவமனை மருத்துவ குறிப்பு |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் -இல்லை</u>**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் -இல்லை</u>**

BARSAD BEGUM A
Digitally signed by BARSAD BEGUM A
Date: 2026.06.10

மோ.வா.வி.கோ.தீர்ப்பாயர்/சார்பு நீதிபதி

திருவைகுண்டம்

மோ.வா.வி.கோ.தீர்ப்பாயம்,ஸ்ரீவைகுண்டம்,

MCOP.No.12/2025

அசல்/வரைவு தீர்ப்புரை

நாள் 10.6.2026